**OS.No.237/2024, Dated 04.09.2025**

The witness sworn under Oaths Act 1969 on this the 4th day of Sep 2025.

**வா.சா.1 – விவேக் ஆனந்த் த/பெ. வையத்தரசு வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் B.E. பொறியியல் படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் நன்றாக எழுத படிக்க தெரியும். நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை ஆங்கில்த்தில் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்கமூலத்தை படித்து பார்த்து தான் நான் கையொப்பம் செய்து கொடுத்துள்ளேன். எனது முதல் விசாரணை வாக்கமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் நான் சொல்லி தான் தட்டச்சு செய்து தாக்கல் செய்துள்ளார்கள். இந்த வழக்கில் வெங்கடேசன் தாக்கல் செய்துள்ள பதிலுரையை நான் படித்து பார்த்துள்ளேன். அந்த பதிலுரையில் உள்ள சங்கதிகளை நான் மறுத்து எனது முதல் விசாரணை வாக்கமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 10.10.2013 அன்று ரூ.2,50,000/–த்தை பிரதிவாதி வாங்கவில்லை என்று அவரது பதிலுரையில் அவர் குறிப்பிட்டுள்ளதை நான் எனது முதல் விசாரணை வாக்கமூலத்தில் மறுக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி சிறுக சிறுக வாங்கிய பணத்திற்கு 36 % வட்டி போட்டு பிரதிவாதியை மிரட்டி அடமானப்பத்திரம் எழுதி வாங்கியதாக பிரதிவாதி குறிப்பிட்டுள்ளதையும் நான் எனது முதல் விசாரணை வாக்கமூலத்தில் மறுக்கவில்லை என்றால் சரிதான். ரூ.2,50,000/–க்கு அடமானப்பத்திரத்தை மோசடியாக நான் உருவாக்கி உள்ளதாக பிரதிவாதி பதிலுரையில் குறிப்பிட்டுள்ளதையும் நான் எனது முதல் விசாரணை வாக்கமூலத்தில் மறுக்கவில்லை என்றால் சரிதான். அதிகமாக வட்டி போட்டு பிரதிவாதி ரூ.2,50,000/– ரொக்கமாக கடன் பெறவில்லை என்றாலும், அடமானப்பத்திரம் மோசடியாக உருவாக்கப்பட்டது என்று பிரதிவாதி பதிலுரையில் குறிப்பிட்டுள்ளதை நான் எனது பிரமாண வாக்கமூலத்தில்

மறுக்கவில்லை என்றால் சரிதான். 2012ம் ஆண்டு பிரதிவாதியின் தாயார் அடிப்பட்டு வேலூர் மருத்துவமனையில் இருந்தபோது, ரூ.50,000/–மும் அதன் பின்னிட்டு விவசாயத்திற்காக ரூ.1,00,000/–மும் தான் பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கினார் என்றாலும், ஆனால் பிரதிவாதியை மிரட்டி ரூ.2,50,000/–க்கு அடமானப்பத்திரம் எழுதி வாங்கப்பட்டது என்று பதிலுரையில் சொல்லியுள்ள சங்கதிகளை எனது முதல் விசாரணை வாக்கமூலத்தில் நான் மறுக்கவில்லை என்றால் சரிதான். நான் அனுப்பிய அறிவிப்பிற்கு உடல்நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையா இருந்ததால் தான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்று பிரதிவாதி தனது பதிலுரையில் கூறியுள்ளதையும் எனது முதல் விசாரணை வாக்கமூலத்தில் நான் மறுக்கவில்லை என்றால் சரிதான். நான் அடமானம் பெற்றுள்ள சொத்து விவசாய நிலம் என்றால் சரிதான். விவசாய நிலம் என்பதால் கடன் நிவாரண சட்டப்படி நான் 24% வட்டி கேட்க முடியாது என்றால் சரியல்ல. கடன் நிவாரண சட்டப்படி நான் 9% வட்டி தான் கோர முடியும் என்றால் சரியல்ல. மேலும், என்னிடமும், எனது தகப்பனாரிடமும் பிரதிவாதி ரூ.1,50,000/– தான் கடன் பெற்றார் என்றாலும் நாங்கள் அவரை மிரட்டி ரூ.2,50,000/–க்கு அடமானப்பத்திரம் எழுதி வாங்கினோம் என்றால் சரியல்ல. 10.10.2013 அன்று ரூ.2,50,000/– கடனாக கொடுத்து அடமான பத்திரம் எழுதி வாங்கியதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு வங்கி கணக்கு உள்ளது. நான் ரூ.2,50,000/– த்தை பிரதிவாதிக்கு கொடுத்ததற்கு எனது வங்கி கணக்கில் குறிப்பு இருக்குமா என்றால் இல்லை. எனவே வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2025.09.04 18:15:00 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்